449
449
4.12

வகீல் பிரசுரம் 5

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச்சட்டம்

(தமிழில் திருத்தச் சட்டம் - விதிகள் - உள்பட விளக்கம்)

(With Full Text in English of the Tanjore Tenants and Pannaiyal (Protection) Ordinance Amendment Ordinance and Rules.)

SCANNED

(All Rights Reserved)

2க1193,2,3
N52
54379

THE "VAKIL" September 1952. Re. 0-12-0

வக்கீல் பிரசுரம் 5

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச்சட்டம்

(தமிழில் திருத்தச் சட்டம் - விதிகள் - உள்பட விளக்கம்)

(With Full Text in English of the Tanjore Tenants and Pannaiyal (Protection) Ordinance Amendment Ordinance and Rules.)

(All Rights Reserved).

Supplement to THE "VAKIL" September 1952. Re. 0-12-0

முகவுரை

தஞ்சை ஜில்லாவுக்காக 23—8—1952ல் பிரப்பிக்கப்பட்ட இந்த அவசரச் சட்டமானது 5—9—1952 தேதியுள்ள மற்றொரு அவசரச் சட்டத்தால் முக்கிய விஷயங்களில் திருத்தி அமைக்கப்பட்டிருப்பதுடன் பக்கத்திலுள்ள மற்ற ஜில்லாக்களுக்கும் விஸ்தரிக்கப் படலாம். மேலும் இந்த அவசரச் சட்டமானது சென்னைச் சட்ட சபைகள் மறுபடியும் கூடிய ஆறு வாரங்களுக்குள் உறுதி செய்ய படலாம்; அல்லது வேறு மாறுதல்களுடன் புதிய சட்டமாக்கப் படலாம். இச்சட்ட ஷரத்துக்களையும் விதிகளையும் நிலச் சுவான்தார்களும் சரி, குத்தகைதார்களும் சரி, வார சாகுபடிக்காரர்களும் சரி, பண்ணையாட்களும் சரி - சரிவரத் தெரிந்துகொண்டால் வீண் விவகாரங்களுக்கும் சச்சரவுகளுக்கும் இடமிருக்காது. அதற்காகவே கூடுமானவரை எளிய தமிழ் நடையில் இச் சட்டம் இங்கு விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் சட்டங்களிலும் விதிகளிலும் சந்தேகங்கள் தோன்றும் போது அவைகளின் ஆங்கில வாசகமேதான் அர்த்தம் செய்யப்பட வேண்டுமென்று இருப்பதால் இச் சட்டத்தையும் விதிகளையும் ஆங்கிலத்திலுள்ளபடியேயும் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதை நேயர்கள் பயன் படுத்திக் கொள்ளலாம்.

இப் புத்தகத்தின் விலை ரூ. 0—12—0.
தபால் சார்ஜ் பிரத்தியேகம்.
தேவையான பிரதிகளுக்கு
உமேகண்ட விலாசத்திற்கு மணியார்டர் செய்யவும்

மானேஜர்—"வக்கீல்"
தமிழ் சட்டப் பத்திரிகை
தபால் பெட்டி 26, :: கும்பகோணம் (தென் இந்தியா)

நீங்கள் "வக்கீல்" பத்திரிகையின் சந்தாதாராகச்
சேர்ந்துவிட்டீர்களா?
இல்லாவிட்டால் உடனே சேரவும்.

பொருளடக்கம்

செக்ஷன்		பக்கம்
	முகவுரை	5
1.	சட்டத்தின் பெயரும் அமுல் தேதியும்	6
2.	சொற்களின் பொருள்	6
3.	ஒப்பந்தங்களும் மற்றச் சட்டங்கள் முதலியவைகளும் இச் சட்டத்தால் ரத்தாகிவிடும்	8
4.	சமரச அதிகாரிகளின் நியமனம்	9
5.	ரிவன்யூ கோர்ட்டுகளின் அமைப்பு	9
6.	சாகுபடிதார்களுக்கும் குத்தகைதார்களுக்கும் 5 வருட கெடுவுக்கு உரிமை உண்டு	9
7.	சாகுபடி அல்லது குத்தகை ஏற்பாடுகள் எல்லாவற்றிற்கும் பொருந்தும் நிபந்தனைகள்	12
8.	சாகுபடிதார் அல்லது குத்தகைதார் கொடுக்கவேண்டிய வாரம் அல்லது குத்தகை	13
9.	குத்தகை அல்லது வார சாகுபடிச் சீட்டு எழுதப்பட வேண்டும்	15
10.	குத்தகைதார் அல்லது சாகுபடிதாரை அப்புறப்படுத்தல்	16
11.	பண்ணையாட்களின் கூலி	17
12.	பண்ணையாட்களை நீக்குவது	18
13.	தகராறுகள் ஏற்பட்டால் ரிவன்யூ கோர்ட்டுகளுக்குத் தான் அதிகாரம்	19

14. சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லை 20

15. தஞ்சைக்கு வெளியே உள்ள இடங்களுக்குப் பொருந்தும் விசேஷ நிபந்தனைகள் 20

16. விதிகள் செய்ய அதிகாரம் 20

ஷெடியூல்—மாயூரம் ஒப்பந்தம் 21

17. விதிகள் 23

18. The Tanjore Tenants and Pannaiyal (Protection) Ordinance as amended 31

19. The Tanjore Tenants and Pannaiyal (Protection) Rules 40

தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டம்

சென்னை கவர்னர் அவர்களால் இந்த அவசரச் சட்டம் 23-8-1952ல் 1952-ஆம் வருடத்திய 4-ஆவது அவசரச் சட்டமாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது, 5-9-1952 தேதியுள்ள மற்றொரு அவசரச் சட்டத்தால் இது திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

முகவுரை

தஞ்சை ஜில்லாவில் நிலச்சுவான்தார்கள் அல்லது அவர்களுடைய ஏஜண்டுகளுக்கும், சாகுபடிதார்கள் பண்ணையாட்களுக்குமிடையே மனத்தாங்கல் ஏற்பட்டிருப்பதாலும், அதனால் சாகுபடிதார்களும் பண்ணையாட்களும் அகற்றப்படும் விவசாய சம்பந்தமான குற்றங்களும் கலகங்களும் ஏற்படும் வருவதாலும்;

மேலும், இப்போதிருக்கும் நிலைமை நீடிக்கப்பட்டால் விவசாய உற்பத்தி குறைந்து போய்விடும் என்று கவலை ஏற்படுவதாலும்;

மேலும், இவ்விஷயத்தைப்பற்றி உடனடியாக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும் அவசியம் ஏற்பட்டிருப்பதாகச் சென்னைக் கவர்னர் அவர்களுக்குத் தோன்றுவதுடன் ராஜ்ய சட்ட மன்றம் கூடாமலிருப்பதாலும்;

ஆகையால் இப்போது அரசியல் அமைப்புச் சட்டத்தின் 213 (1) ஆவது ஷரத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை உபயோகித்துச் சென்னைக் கவர்னர் அவர்கள் கீழ்கண்ட அவசரச் சட்டத்தைப் பிரகடனம் செய்துள்ளார்:—

சட்டத்தின் பெயரும் அமுல் தேதியும்

1. இந்த அவசரச் சட்டத்திற்கு 1952-ஆம் வருடத்திய தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டம் என்று பெயர்.

செக்ஷன் 1

2. (i) இச்சட்டம் உடனடியாகத் தஞ்சை ஜில்லா பூரா விலும் அமுலுக்கு வரும். (ii) சென்னை ராஜ்யத்தில் (தஞ்சைக்குப்) பக்கத்திலுள்ள இடங்களிலும் இச்சட்டத்தைக் குறிப்பிட்ட தேதி முதல் அமுலில் இருக்கும்படி கெஜட் அறிக்கை மூலம் சர்க்காரே விஸ்தரிக்கலாம்.

இருந்தாலும் கெஜட் அறிக்கை மூலம் குறிப்பிடப்படும் தேதி முதல், தஞ்சை ஜில்லாவில் எந்தப் பாகத்திலோ அல்லது இச்சட்டம் அமுலில் இருக்கும் வேறு குறிப்பிட்ட இடங்களிலோ இச்சட்டம் அமுலில் இல்லாமல் செய்யவும் சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

சொற்களின் பொருள்

இந்த அவசரச் சட்டத்தில், விஷயத்தைப் பொறுத்தாவது, சந்தர்ப்பங்களைப் பொறுத்தாவது வேறு விதமாக அர்த்தம் செய்யும்படி இருந்தாலொழிய கீழே கண்ட சொற்களின் பொருள் பின் வருமாறு:—

செக்ஷன் 2

(a) "விவசாய வருடம்" என்றால் மே மாதம் முதல் தேதியில் ஆரம்பமாகும் வருடம்.

(b) "சமரச அதிகாரி" என்றால், குறிப்பிட்ட இடத்திற்கு இச்சட்டப்படி நியமிக்கப்படும் சமரச அதிகாரியைக் குறிப்பிடும்; அவ்விதம் யாதொரு அதிகாரியும் நியமிக்கப்

படாத இடங்களுக்கு அவ்விடத்திற்கு அதிகாரமுள்ள தாசில்தாரைக் குறிக்கும்.

(c) "சாகுபடிதார்" அல்லது "குத்தகைதார்" என்றால்—வேறு ஒருவருடைய நிலத்தைச் சாகுபடி அல்லது குத்தகைக்கு வியக்தமாகவோ, வேறு விதமாகவோ ஏற்பாடு செய்து கொண்டு அந்நிலங்களைத் தம்முடைய சரீர உழைப்பையும் சேர்த்துக் கொண்டோ அல்லது தம்முடைய குடும்பத்தினருடைய சரீர உழைப்பையும் சேர்த்துக் கொண்டோ சாகுபடி வேலை செய்ப வரையும் அவருடைய வார்சுகளையும் குறிக்கும்.

(d) "சர்க்கார்" என்பது ராஜ்ய சர்க்கார் என்று அர்த்தம்.

(e) "மொத்த மகசூல்" என்பதில் போரடியில் கிடைக்கும் தானியம் உள்படவும் சேர்ந்ததே.

(f) "நிலத்தின் சொந்தக்காரர்"—என்றால் நிலத்தை சாகுபடிக்கு விடும் நிலத்தின் சொந்தக்காரரையும் அவருக்குள் பாத்தியம் கொண்டாடுபவரையும் குறிக்கும். அவர்களுடைய வார்சுகளும் சட்ட பூர்வமான பிரதிநிதிகளும் இதில் அடங்கிய வர்களே.

(g) "அறிக்கை" என்பது "போர்ட் செயிண்ட் ஜார்ஜ்" கெஜட்டில் பிரசுரம் செய்யப்படும் அறிக்கை என்று பொருள்.

(h) "பண்ணையாள்"—என்பது நிலத்தின் சொந்தக்காரராலோ சாகுபடிதாரராலோ ஒரு விவசாய வருடம் பூராவிலும் நிலங்களைப் பார்த்துக்கொள்வதற்காகவும் அவசியமான காலங்களில் நிலங்களில் வேலை செய்வதற்காகவும் அமர்த்திக் கொள்ளப் படும் தொழிலாளரைக் குறிக்கும். தாற்காலிகமாகவோ, ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்வதற்காகவோ, அமர்த்திக்கொள்ளப் படுபவர்கள் பண்ணையாட்கள் அல்ல.

(i) "விதிகளின் படி" என்றால் இச்சட்டத்தை அனுசரித்து ஏற்படுத்தப்படும் விதிகளின்படி என்று அர்த்தம்.

(j) "குத்தகை" என்பதில் நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுக்கப்படவேண்டிய மகசூலின் வீதமும் அடங்கியதே.

(k) "ரெவென்யூ கோர்ட்"—என்றால் ஒரு இடத்திற்கு இச்சட்டப்படி அமைக்கப்பட்ட ரெவென்யூ கோர்ட் என்று அர்த்தம்; அவ்விதம் ஒரு ரெவென்யூ கோர்ட் அமைக்கப்படாவிட்டால் அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள ரெவென்யூ டிவிஷனல் ஆபீசருடைய கோர்ட்டைக் குறிக்கும்.

ஒப்பந்தங்களும் மற்றச் சட்டங்கள் முதலியவைகளும் இச்சட்டத்தால் ரத்தாகிவிடும்

(a) இதற்குமுன் உள்ள சட்டங்களிலோ, மாமூல் அல்லது பழக்க, வழக்கங்களிலோ, ஒப்பந்தங்களிலோ, அல்லது கோர்ட்டு டிக்ரி அல்லது உத்தரவுகளிலோ வேறு விதமாக இருந்த போதிலும் இச்சட்ட ஷரத்துக்களின்படியே அமுல் நடத்தப்படும்.

செக்ஷன் 3

(b) ஆனால் எந்தக் கிராமத்தில் ஒருவருக்கு ஒரு வேலிக்கு (அதாவது $6\frac{2}{3}$ ஏகருக்கு) மேற்படாத நஞ்சை நிலமோ அல்லது சர்க்கார் தண்ணீர் பாசனமுள்ள புஞ்சை நிலமோ இருந்தாலும் சரி; அல்லது 3 வேலிக்கு (அதாவது 20 ஏகராவுக்கு) மேற்படாத சர்க்கார் தண்ணீர் பாசனமில்லாத புஞ்சை நிலங்கள் இருந்தாலும் சரி, அந்த நிலங்களுக்கு இச்சட்ட ஷரத்துக்கள் எதுவும் கிடையாது.

சமரச அதிகாரிகளின் நியமனம்

சர்க்காரோ அல்லது அவர்களிடம் இதற்காக அதிகாரம் பெற்ற அதிகாரியோ, குறிப்பிட்ட பிரதேசத்தில் இச்சட்டத்தில் சமரச அதிகாரி செய்ய வேண்டியதாகக் கண்டிருக்கும் அலுவல்களைச் செய்வதற்காக ஒரு சமரச அதிகாரியை நியமிக்கலாம்.

செக்ஷன் 4

ரிவன்யூ கோர்ட்டுகளின் அமைப்பு

இச்சட்டத்தில் ரிவன்யூ கோர்ட்டு செய்ய வேண்டியதாகக் கண்டிருக்கும் அலுவல்களைச் செய்வதற்காக ரிவன்யூ டிவிஷனல் ஆபீசர் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு அதிகாரியைக் குறிப்பிட்ட பிரவேசத்திற்கு ஒரு ரிவன்யூ கோர்ட்டாக அதிகாரம் செலுத்தும்படி அறிக்கை மூலம் அமைக்கச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

செக்ஷன் 5

சாகுபடிதார்களுக்கும் குத்தகைதார்களுக்கும் 5 வருட கெடுவுக்கு சாகுபடி செய்யும் உரிமை உண்டு

1. 1—12—1951 தேதியில் நிலத்தைத் தம் அனுபோகத்தில் வைத்துக் கொண்டிருந்த சாகுபடிதார்களும் குத்தகைதார்களும், இச்சட்ட ஷரத்துக்களுக்குட்பட்டு, அதே நிலங்களை 1952—53 விவசாய வருடத்திலிருந்து 5 வருடங்களுக்கு அதே முறைமையில் அனுபவிக்க உரிமை உண்டு. இச்சட்டம் அமுலுக்கு வரும்போது அச்சாகுபடிதார்கள் அல்லது குத்தகைதார்களுடைய அனுபவத்தில் அந்நிலங்கள் இல்லாவிட்டாலும் 1—12—1951 தேதிக்குப் பின்பு அதே நிலங்களைச் சாகுபடி அல்லது குத்தகைக்கு ஒப்புக் கொண்டவர்

செக்ஷன் 6

களை அகற்றி, தமக்கு அந்நிலங்கள் சுவாதீனம் கொடுக்கப்பட வேண்டுமென்று கோரி அவர்கள் சமரச அதிகாரிக்கு மனுப் போட உரிமை உண்டு.

2. 1950—51 விவசாய வருடத்தில் நிலத்தை அனுபவித்து வந்த சாகுபடிதார்களும், குத்தகைதார்களும் 1-12-1951 தேதியில் அந்நிலங்கள் தங்கள் அனுபோகத்தில் இல்லாவிட்டாலும், தங்களுக்கு அதே நிலங்கள் மறுபடியும் சாகுபடிக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்று கோரி சமரச அதிகாரிக்கு மனுப் போடலாம். ஆனால் 1—12—1951 தேதியிலோ அதற்கு முன்போ அந்நிலங்கள் வேறு ஒரு சாகுபடிதாருக்கு விடப்பட்டு இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பே அவர் நிலங்களில் ஒரு பயிர் சாகுபடியும் செய்திருந்தால் மேற்கண்டபடி மனுப் போட முடியாது.

மேலே கண்டபடி நிலங்கள் திரும்பவும் சுவாதீனம் கொடுக்கப்பட்ட சாகுபடிதார்களும் இச்சட்ட ஷரத்துக்களுக்குட்பட்டு மேலே (1) ஆவது உட்பிரிவில் கண்ட 5 வருட கெடுவுக்கு, சாகுபடிதார் முறையில் அந்நிலங்களை அனுபவிக்கப் பாத்தியமுண்டு.

3. மேலே (1) ஆவது உட்பிரிவின்படியோ (2) ஆவது உட்பிரிவின்படியோ சமரச அதிகாரிக்குப் போடப்படும் மனுக்கள் இச்சட்டம் அமுலுக்கு வந்த 30 நாட்களுக்குள் போடப்பட வேண்டும். மனுவில் ஒரு ரூபாய் கோர்ட்டு பீசு ஸ்டாம்பு ஒட்டப்பட வேண்டும்.

சமரச அதிகாரியிடம் மனுக் கொடுக்கப்பட்டவுடன் அவர் நிலத்தின் சொந்தக்காரருக்கும், நிலத்தைச் சுவாதீனம் வைத்துக் கொண்டிருக்கும் சாகுபடிக்காரர் இருந்தால் அவருக்கும், இம்மனு சம்பந்தமாய் அவரவர்களுடைய ஆட்சேபனைகளைச் சொல்லிக் கொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்து, மனுவில் கண்ட

விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாக விசாரணை செய்து மனுவை அங்கீகரித்தோ, தள்ளியோ உத்தரவு செய்ய வேண்டும். மனுவை அங்கீகரித்துச் சமரச அதிகாரி உத்தரவு செய்யும் போது அவருக்கு நியாயமாகவும் சரியானதென்றும் தோன்றும் நிபந்தனைகளையும் அவர் ஏற்படுத்தலாம்.

மனுதார் ஏற்கனவே நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுக்க வேண்டிய குத்தகை அல்லது வார பாக்கி ஏதாவது இருந்தால் அதைக் கொடுத்து விடுவது பற்றியும்; மனுதார் வசம் நிலத்தின் சுவாதீனம் இல்லாமலிருந்த காலத்தில் நிலத்தில் செய்யப்பட்ட வேலைகளுக்காகவும் வேறு செலவுகளுக்காகவும் மனுதார் நிலத்தின் சொந்தக்காரருக்கோ அல்லது மனுத் தேதியில் நிலத்தைச் சுவாதீனம் வைத்துக் கொண்டிருந்த சாகுபடிதாருக்கோ அதைத் திரும்பக் கொடுப்பது பற்றியும் இந்நிபந்தனைகள் இருக்கலாம். மேற்கண்ட செலவுகளைத் திருப்பக் கொடுப்பது சம்பந்தமாய் அது எவ்வளவு என்றும், அதை எப்படி திருப்பிக் கொடுப்பதென்றும் இருதரப்பினரும் ஒத்துக்கொள்ளா விட்டால் தான் சமரச அதிகாரி இது விஷயமாய் நிபந்தனைகள் ஏற்படுத்தலாம்.

விவரணம். மேலே (2) ஆவது உட்பிரிவில் கண்டபடி ஒரு பழைய சாகுபடிதாரிடம் நிலம் கொடுக்கப்பட வேண்டியது சம்பந்தமான நிபந்தனைகள் ஏற்படுத்துவதற்குப் பதிலாக, சமரச அதிகாரி இஷ்டப்பட்டால், வேறு விதமாக உத்தரவு செய்யலாம். அதாவது அவர் உத்தரவு பிறப்பிக்கும் போது நிலத்திலுள்ள மகசூலானது அறுவடை செய்யப்பட்ட பிறகுதான் அந்நிலம் மனுதாருடைய சுவாதீனத்தில் விடப்பட வேண்டுமென்றும் உத்தரவு செய்யலாம்.

4. மேலே (3) ஆவது உட்பிரிவின்படி சமரச அதிகாரியால் செய்யப்படும் உத்தரவின் பேரிலும், அவரால் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைகளின் பேரிலும் உத்தரவு ஏற்பட்ட 15 நாட்களுக்

குள் ரிவன்யூ கோர்ட்டுக்கு அப்பீல் செய்யலாம். மேற்கண்ட 15 நாட்களுக்குள் அப்பீல் தாகல் செய்யப்படா விட்டாலும், விசேஷ சந்தர்ப்பங்களில் ஏற்படும் தாமதத்தை மன்னித்து அதற்குப் பிறகும் அப்பீலை ஏற்றுக்கொள்ள ரிவன்யூ கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. அப்பீல் மனுவின் பேரில் ஒரு ரூபாய் கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்ட வேண்டும்; ரிவன்யூ கோர்ட்டின் தீர்ப்பே முடிவானது.

சாகுபடி அல்லது குத்தகை ஏற்பாடுகள் எல்லாவற்றிற்கும் பொருந்தும் நிபந்தனைகள்

ஒவ்வொரு சாகுபடிதார் அல்லது குத்தகைதாரும் கீழே கண்ட நிபந்தனைகளின்படி நிலத்தை வைத்துக் கொண்டிருக்க வேண்டும். அவையாவன :— (a) விதை, உழவு, எரு இவற்றிற்காகும் செலவுகள் உள்பட எல்லா வேலைகளையும் விவசாயச் செலவுகளையும் சாகுபடிதார் அல்லது குத்தகைதாரே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

செக்ஷன் 7

(b) நிலத்திற்காகச் சர்க்காருக்கும் ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டிய எல்லாத் தொகைகளையும் தண்ணீர் தீர்வை விதிக்கப் பட்டிருந்தால் அதையும் மாமூல் வர்த்தனைகளையும், உள்ளூர் காரியங்களுக்காகக் கொடுக்கப்பட வேண்டிய தொகைகளையும் நிலத்தின் சொந்தக்காரர் கொடுக்கக் கடமைப் பட்டவர்.

(c) வாய்க்கால் வெட்டையும், அது சம்பந்தமான அபிவிருத்திச் செலவுகளையும் நிலத்தின் சொந்தக்காரரே பொறுத்து கொள்ள வேண்டும்; நிலங்களுக்குள் பாயும் கண்ணிகளை வெட்டுவதையும் அது சம்பந்தமான அபிவிருத்திச் செலவுகளையும் சாகுபடிதார் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(d) செக்ஷன் 6ல் கண்ட 5 வருட கெடுவின் முடிவில் சாகுபடிதார் அல்லது குத்தகைதாரின் சாகுபடி பாத்தியத்தை

அத்துடன் முடித்துவிட வேண்டுமென்று நிலத்தின் சொந்தக்காரர் விரும்பினால், அக்கெடுவின் கடைசி வருடம் முடிவடைவதற்கு குறைந்தது 12 மாதங்களுக்கு முன்னதாகவே அவர் சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்கு எழுத்து மூலம் நோட்டீசு கொடுக்க வேண்டும். அவ்விதம் நோட்டீசு கொடுப்பதன் மூலம் சாகுபடி பாத்தியம் முடிக்கப்பட்டாலொழிய, அச்சாகுபடிதாரோ குத்தகைதாரோ மறுபடியும் ஒரு 5 வருஷ கெடுவுக்கு (இந்த ஷரத்திலும் பின்வரும் ஷரத்துக்களிலும் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு) சாகுபடிதார் என்ற முறைமையில் நிலத்தை அனுபவித்து வரப் பாத்தியமுண்டு.

(e) மேலே கண்ட 5 வருட கெடுவுக்குள்ளேயே எந்த வருடக் கடைசியில் சாகுபடிதாரோ குத்தகைதாரோ தம்முடைய பாத்தியத்தை விட்டு விட விரும்பினாலும் அவ்வருடம் முடிவதற்குக் குறைந்தது 6 மாதம் முன்னதாகவே நிலத்தின் சொந்தக்காரருக்கு எழுத்து மூலம் நோட்டீசு கொடுத்து நிலத்தை விட்டு விடலாம்.

சாகுபடிதார் அல்லது குத்தகைதார் கொடுக்க வேண்டிய வாரம் அல்லது குத்தகை

(a) நிலத்தின் மகசூல், சாகுபடிதாருக்கும் நிலத்தின் சொந்தக்காரருக்குமிடையே பிரித்துக்கொள்ள வேண்டிய

செக்ஷன் 8

ஏற்பாடாக இருந்தால், அறுவடை, போரடி இவைகளுக்கான கூலிச் செலவுகள் போகப் பாக்கி மொத்த மகசூலில் 5ல் 2 பங்குக்குச் சாகுபடிதார் பாத்தியமுள்ளவர். ஆனால் அவர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தப்படி சாகுபடிதாருக்கு அதிகமான வீதாசாரம் கிடைக்க வேண்டியிருந்தால் அதையே சாகுபடிதார் அடையப் பாத்தியமுண்டு. மேலும் நிலத்தின் சொந்தக்காரருக்கு மாமூல் வழக்கப்படி கொடுக்கப்பட வேண்டிய வைக்கோல் கட்டுகளை கொடுத்து விட்டு, பாக்கி வைக்கோல் ஜாடாவையும் சாகுபடிதாரே வைத்துக்

கொள்ளலாம். பிரிக்கப்பட வேண்டிய மகசூலானது தானியமாக இருந்தால் அது களத்து மேட்டிலேயே நிலத்தின் சொந்தக்காரருக்கும் சாகுபடிதாருக்குமாகப் பிரிக்கப்படவேண்டும். (b) குத்தகை கொடுக்கப்பட வேண்டிய ஏற்பாடாக இருந்தால், மாமூல்படி கொடுக்க வேண்டிய வைக்கோல் கட்டுகளைத் தவிர, அந்நிலத்தில் அறுவடை, போரடிக் கூலிச் செலவுகள் போகப் பாக்கி சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய மொத்த மகசூலில் 5-ல் 3 பாகத்தை, குத்தகைதார் நிலத்தின் சொந்தக்காரருக்குக் குத்தகையாகக் கொடுக்கவேண்டும். இதைவிடக் குறைவான குத்தகை கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருந்தால் அப்படியே கொடுத்தால் போதும். ரொக்கக் குத்தகை கொடுக்கப்பட வேண்டியிருந்தால் மேற்கண்ட 5-ல் 3 பாகத்திற்கோ அல்லது அதை விடக் குறைவாக ஒப்புக்கொண்டிருந்தால் அதற்கோ மேற்கண்ட 5 வருட கெடுவுக்கு முந்திய வருடத்தில் அமுலில் இருந்த விலைப்படி கணக்குச் செய்து கொடுக்க வேண்டியது.

குத்தகையானது தானியமாகக் கொடுக்கப்பட வேண்டி இருந்தால், ஒவ்வொரு அறுவடை முடிந்ததும், உடனடியாகக் களத்து மேட்டிலேயே நிலத்தின் சொந்தக்காரருடைய பாகம் அவரிடம் கொடுக்கப்படவேண்டும்.

சாகுபடிதார், நிலத்தில் நன்செய்ப் பயிர் சம்பந்தமான எவ்வித வேலைகளும் நடத்தப்படாமலிருக்கும் போதும், நன்செய்ப் பயிர் சாகுபடி செய்ய முடியாத காலங்களிலும், அந்நிலத்தில், தம் சொந்தப் பொறுப்பில் சாகுபடி செய்யக் கூடிய நவதானிய வகைகளும் (Pulses) வேறுவிதமான தாற்காலிகப் பயிர்களும் முற்றிலும் சாகுபடிதாரைச் சேர்ந்ததே.

மேலேகண்ட அளவுக்குக் குறைவாக தங்கள் வீதம் கிடைக்க சாகுபடிதாரோ குத்தகைதாரோ செய்து கொள்

ளும் ஒப்பந்தங்கள் சாகுபடிதாரையும் குத்தகைதாரையும் கட்டுப் படுத்த மாட்டாது.

குத்தகை அல்லது வார சாகுபடிச் சீட்டு எழுதப் பட வேண்டும்.

1\. நிலம் குத்தகைக்கு விடப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு ஏற்பாட்டை பற்றியும் குத்தகைதார் அல்லது சாகுபடிதாரின் பெயர், விவரம், குத்தகை அல்லது சாகுபடிக்கு விடப்பட்ட நிலங்களின் பெயர் இருந்தால் பெயர், சர்வே நம்பர் விவரம், விஸ்தீரணம், ஒப்பந்த ஷரத்துக்கள் இவைகளை எழுத்து மூலம் எழுதி நிலத்தின் சொந்தக்காரரோ அவருடைய ஏஜண்டோ அதில் கையெழுத்துச் செய்து அதைக் குத்தகைதார் அல்லது சாகுபடிக்காரரிடம் கொடுக்க வேண்டும். அசல் சீட்டைக் குத்தகைதார் அல்லது சாகுபடிதாருக்குக் கொடுத்த இரண்டு வாரங்களுக்குள் அதன் நகல் ஒன்றைத் தாலூகா ஆபீசில் தாகல் செய்து விடவேண்டும். அசல் சீட்டுக் கொடுக்கப்பட்டு அதைச் சாகுபடிதாரோ குத்தகை தாரோ பெற்றுக் கொள்ள மறுத்தாலும் அதிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் மேல் கண்ட விதம் நகல் தாலூகா ஆபீசுக்கு அனுப்பப்பட வேண்டும்.

செக்ஷன் 9

2\. குத்தகை அல்லது வாரச் சீட்டுக்கு யாதொரு ஸ்டாம்பும் தேவையில்லை.

3\. நிலத்தின் சொந்தக்காரரோ அல்லது அவருடைய ஏஜண்டோ மேலே 1 ஆவது உட்பிரிவின்படி செய்யத் தவறினால் அவர் தவறிய ஒவ்வொரு குத்தகை அல்லது சாகுபடி ஏற்பாடு சம்பந்தமாயும் ரூபாய் 50 வரையில் அவருக்கு அபராதம் விதிக்க

ரிவன்யூ கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. இவ்விதம் விதிக்கப்பட்ட அபராதத் தொகை நிலவரிஸ்தியைப்போல் வசூல் செய்யப்படும்.

குத்தகைதார் அல்லது சாகுபடிதாரரை அப்புறப் படுத்துதல்.

1. மேலே செக்ஷன் 6ல் கண்டிருக்கிறபடி ஒரு குத்தகைதாரரையோ வார சாகுபடிதாரரையோ நிலத்தை விட்டு அப்புறப் படுத்துவது தவிர, கீழே கண்ட சந்தர்ப்பங்களிலும் அப்புறப் படுத்தலாம். அதாவது:—(a) குத்தகைச் சீட்டில் குத்தகை கொடுக்க வேண்டியதாகக் கண்டிருக்கும் கெடுத் தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளோ, யாதொரு சீட்டும் இல்லா விட்டால், கிராம வழக்கப்படி குத்தகை அல்லது வாரம் அளக்கவேண்டிய தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள்ளோ குத்தகை தாரோ சாகுபடிதாரோ குத்தகை அல்லது வாரம் கொடுக்கத் தவறினாலும்; (b) நிலத்திற்கோ அதிலிருக்கும் பயிருக்கோ நாசம் அல்லது கெடுதி ஏற்படும்படி குத்தகை தாரோ சாகுபடிதாரோ செய்தாலும்; (c) நிலத்தை விவசாயம் தவிர வேறு காரியங்களுக்கு உபயோகித்தாலும், (d) நிலத்தை உட்குத்தகை அல்லது சாகுபடிக்கு விட்டாலும்; (e) ஒரு குத்தகைதாரரையோ சாகுபடிதாரரையோ நிலத்தில் வைத்திருந்தால் சாகுபடி நன்றாக நடக்காது என்று ரிவன்யூ கோர்ட்டுக்குத் தோன்றும் விதம் அவருடைய நடத்தை யிருந்தாலும் மேற் கண்ட சந்தர்ப்பங்களிலும் குத்தகைதாரரையோ சாகுபடி தாரரையோ நிலத்தை விட்டு அப்புறப்படுத்தலாமே ஒழிய வேறு வழியில் வெளியேற்றக் கூடாது.

செக்ஷன் 10

2. (a) மேற்கண்ட காரணங்களினால் ஒரு குத்தகை தாரரையோ சாகுபடிதாரரையோ நிலத்தை விட்டு அகற்ற வேண்டுமானால், அதற்காக ரிவன்யூ கோர்ட்டில் மனுக் கொடுக்க வேண்டுமே ஒழிய வேறு வகையில் அகற்றக் கூடாது. (b) அம்மனுவை விசாரித்து ரிவன்யூ கோர்ட்டார் தீர்ப்பு செய்ய

வேண்டும். (c) குத்தகை அல்லது வாரம் கொடுக்காத காரணத்தினால் குத்தகைதாரரையோ சாகுபடிதாரரையோ அப்புறப்படுத்த வேண்டுமென்று கொடுக்கப்படும் மனுக்களில், ரிவன்யூ கோர்ட்டார் அவ்விதம் தீர்ப்புச் செய்யும் முன் விதிகளின்படி குத்தகைதார் அல்லது சாகுபடிதாருக்கு நோட்டீஸ் கொடுத்து, குத்தகை அல்லது வார பாக்கியையும் அந்த நடவடிக்கைச் செலவுகளையும் நிலத்தின் சொந்தக்காரருக்கு நோட்டீசு தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கொடுக்கும்படி முதலில் உத்தரவு செய்ய வேண்டும். குத்தகைதாரோ சாகுபடிதாரோ கோர்ட்டீசில் கண்டபடி செய்யாவிட்டால் அவர் நிலத்தை விட்டு வெளியேற வேண்டுமென்று ரிவன்யூ கோர்ட்டார் உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

பண்ணையாட்களின் கூலி

செக்ஷன் 11

மாமூல் வழக்கப்படி வேலை செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் பண்ணையாட்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தினருக்கும் கீழே கண்டபடி கூலி கொடுக்கப்பட வேண்டும். ஆனால் வேலை செய்வதற்கு ஒன்றுமில்லாத நாட்களுக்குக் கூலி கிடையாது:—

(a) இச்சட்டத்தின் கடைசியில் விவரிக்கப்பட்டிருக்கிற 28-10-1948 தேதியுள்ள மாயூரம் ஒப்பந்த ஷரத்துக்களின் படியோ;

அல்லது

(b) கீழே கண்டபடி நெல் கூலியோ; அதாவது:—வயது வந்த ஆண்களுக்கு 2 மரக்கால் நெல்; வயது வந்த ஸ்திரீகளுக்கு 1 மரக்கால் நெல்; வயது வராதவர்களுக்கு 1 மரக்கால் நெல் ;-வீதமும் கூலி கொடுக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பண்ணையாளும் ஒரு விவசாய வருடத்தில் தனக்கு மேலே (a) ஷரத்தில் கண்ட முறைப்படியாவது அல்லது

(b) ஷரத்தில் கண்ட முறைப்படியாவது கூலி கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்கலாம். ஆனால், (b) ஷரத்தில் கண்டபடி கூலி கொடுக்கப்படவேண்டு மென்று கேட்கும் பண்ணையாட் களுக்கு மாமூல் வரும்படிகளோ சலுகைகளோ கிடையாது. ஆனால் வயதுவந்த ஒரு ஆண் பண்ணையாள் தாமும் தம் குடும்பத் தினரும் வேலை செய்த நிலங்களில் கண்டு முதலாகும் மொத்த மகசூலில் கலம் 1-க்கு ½ மரக்கால் வீதம் 'அறுப்புப் பங்கு'ம், மாமூல்படி மனைக்கொல்லையும் அப்பண்ணையாளுக்குக் கொடுக்கப் பட வேண்டும்.

பண்ணையாட்களை நீக்குவது

1. நிலத்தின் சொந்தக்காரர் ஒரு பண்ணையாளை நீக்கினால் நீக்கிய ஒரு வாரத்திற்குள் அவ்விஷயத்தை அவர் அதிகாரமுள்ள சமரச அதிகாரிக்குத் தெரிவிக்கவேண்டும்.

செக்ஷன் 12

2. நிலத்தின் சொந்தக் காரரிடமிருந்து தமக்கு அவ்வித தகவல் கிடைத்தாலும் சரி; அல்லது 1-3-1952க்குப் பின்போ, இச்சட்டம் அமுலுக்கு வந்த பின்போ நீக்கப்பட்ட பண்ணையாளிட மிருந்து தமக்கு ஏதாவது புகார் கிடைத்திருந்தாலும் சரி; சமரச அதிகாரி சம்பந்தப்பட்ட நிலத்தின் சொந்தக்காரரையும் பண்ணை யாளையும் தம் முன் நேரிலோ ஏஜண்டு மூலமோ ஆஜராகும் படிக்கும், அவரவர்களுடைய கட்சிகளைச் சொல்லிக் கொள்ளும் படிக்கும் நோட்டீசு விடுவார்.

3. அவர்கள் ஏதாவது சொல்லிக் கொண்டால் அதைக் கேட்டும், யுக்தமாகத் தோன்றும் வேறு விசாரணை செய்தும் பண்ணையாளை நீக்கியது சரி அல்ல என்றும் நியாயமல்ல என்றும் அவ்வதிகாரி தீர்மானித்தால் அப்பண்ணையாளைத் திரும்ப

வேலைக்கு எடுத்துக்கொண்டு, அவருக்கு செக்ஷன் 11-ல் கண்டபடி கூலி கொடுக்கும்படிக்கும் சமரச அதிகாரி தம்முடைய மத்தியஸ்தத் தீர்ப்பை எழுதி நிலத்தின் சொந்தக்காரரை அதன்படி செய்யும்படிக்கும் கேட்டுக் கொள்ளுவார்.

4. மேலே (3)ஆவது உட்பிரிவில் கண்ட மத்தியஸ்தத் தீர்ப்பின்படி நிலத்தின் சொந்தக்காரர் செய்யத் தவறினால், இவ் விஷயம் ரிவன்யூ கோர்ட்டுக்குத் தெரிவிக்கப்பட்டதின் பேரில், அக் கோர்ட்டார் தேவையான விசாரணை செய்து நிலத்தின் சொந்தக்காரர், நீக்கப்பட்ட பண்ணையாளுக்கு 6 மாதக் கூலியோ, ரூ. 150யோ, எது குறைவோ அத் தொகையைக் கொடுக்கும்படி ரிவன்யூ கோர்ட்டார் உத்தரவு செய்யலாம்.

தகராறுகள் ஏற்பட்டால் ரிவன்யூ கோர்ட்டுக்குத்தான் அதிகாரம்

இச் சட்டத்தில் வேறு விதமாகக் கண்டிருந்தாலொழிய, நிலத்தின் சொந்தக்காரருக்கும் சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்குமிடையே ஏற்படும் தகராறுகளையும், அல்லது இவர்களுக்கும் பண்ணையாட்களுக்குமிடையே ஏற்படும் தகராறுகளையும், சாகுபடி ஏற்பாட்டின் நிபந்தனைபற்றியோ, குத்தகை, வாரம், கூலி இவைகள் கொடுக்கப்பட்டனவா அல்லவா என்பதைப் பற்றியோ ஏற்படக்கூடிய தகராறுகளையும்கூடச் சம்பந்தப்பட்டவர்கள் மனுப் போடுவதன் பேரில் ரிவன்யூ கோர்ட்டாலேதான் தீர்மானம் செய்யப்பட வேண்டும். ரிவன்யூ கோர்ட்டு தீர்ப்பே முடிவானது.

செக்ஷன் 13

சிவில் கோர்ட்டுகளுக்கு அதிகாரமில்லை

ரிவன்யூ கோர்ட்டாலோ, சமரச அதிகாரியாலோ, அல்லது வேறு இச் சட்ட அதிகாரியாலோ செய்யப்பட்ட உத்தரவுகளையும், தீர்ப்புகளையும், மத்தியஸ்தத் தீர்ப்புகளையும் ரத்துச் செய்யவோ, திருத்தவோ, அல்லது இச் சட்டத்திற்குள் வரும் வேறு விஷயத்தைப்பற்றியோ ஏவ்வித வியாஜ்யங்களையும் மற்ற நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்ள எந்தச் சிவில் கோர்ட்டுக்கும் அதிகாரமில்லை.

செக்ஷன் 14

தஞ்சைக்கு வெளியே உள்ள இடங்களுக்குப் பொருந்தும் விசேஷ நிபந்தனைகள்

தஞ்சை ஜில்லாவுக்குப் பக்கத்திலுள்ள எந்த இடத்திற்காவது இச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டால், அதற்காக இச் சட்ட ஷரத்துக்களை கெஜட் அறிக்கை மூலம் மாற்றியும், திருத்தியும், விதிவிலக்குகள் ஏற்படுத்தியும் அங்கே அமுலுக்குக் கொண்டுவர சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

செக்ஷன் 15

விதிகள் செய்ய அதிகாரம்

இச்சட்டத்தின் நோக்கங்களைப் பூர்த்தி செய்யவும், குறிப்பாக இச் சட்டப்படி ஏற்படும் உத்தரவுகளையும், தீர்ப்புகளையும், மத்தியஸ்தத் தீர்ப்புகளையும் நிறைவேற்றுவதற்காகவும், இச் சட்டத்தை அமுல் நடத்துவதில் ஏற்படக் கூடிய சந்தேகங்களையும் கஷ்டங்களையும் நிவர்த்தி செய்வதற்காகவும் கெஜட் அறிக்கை மூலம் விதிகள் செய்யச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

செக்ஷன் 16

ஷெடியூல்

மாயூரம் ஒப்பந்தப்படி கூலி
(செக்ஷன் 11 (a) பார்க்கவும்)

கூலி 1. பண்ணையாட்களுக்கு தினசரி கூலி 1 மரக்கால்; பெண் வேலையாட்களுக்கு ¾ மரக்கால்.

2. அறுவடை, களவடி, சிந்துமணி, சாத்துவா, நடவாள், களவடி இன்னும் மற்ற இனங்களுக்காகப் பண்ணையாட்களுக்கு மொத்த கண்டு முதலில் 7ல் 1 பங்கு கொடுக்கப்படும். (a) மேற்கண்ட 7ல் 1 பங்கை இரண்டாகப் பிரிக்கவேண்டும். அதாவது கண்டுமுதலாகும் ஒவ்வொரு 14 மரக்காலுக்கும் களவடி 1½ மரக்காலாகவும் அறுவடைக் கூலி ½ மரக்காலாகவும் பிரிக்க வேண்டும். (b) ஒரு நிலத்தை ஜாடாவாகப் பண்ணையாட்களே அறுவடை செய்தால் 7ல் 1 பங்கு அவர்களுக்கே கொடுக்கப்படும். (c) நிலத்தின் ஒரு பாகத்தையே பண்ணையாட்கள் அறுவடை செய்தால் அவர்கள் அறுவடை செய்த கண்டுமுதலில் மட்டில் 7ல் 1 பங்கு அவர்களுக்குக் கொடுக்கப்படும். (d) சில பாகங்களை வேறு கூலியாட்கள் அறுவடை செய்திருந்தால், கூலியாட்களுக்கு என்ன கூலி கொடுக்கப்பட்ட போதிலும் அக் கண்டுமுதலில் 14 மரக்காலுக்கு 1½ மரக்கால் வீதம் பண்ணையாட்களுக்குக் களவடி கொடுக்கப்படும். (e) பண்ணையாட்கள் தங்கள் களவடி பாகத்தை மட்டில் வாங்கிக்கொண்டு வேறு ஒருவரிடத்தில் வேலை செய்யாமலிருப்பதைத் தடுப்பதற்காக அறுவடை நாட்களில் பண்ணையாள் வேண்டுமென்று வேலைக்கு வராமலிருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் இரண்டு மரக்கால் வீதம் அபராதம் கணக்குச் செய்து அது அவருக்குள்ள களவடி அல்லது அவருக்குக் கொடுக்க வேண்டிய வேறு வகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும். (f) ஒவ்வொரு பண்ணையாளுக்கும் அந்த மிராசதாரின்

ஒரு வேலிக்கு ($6\frac{2}{3}$ ஏகருக்கு) மேற்படாத நிலத்தின் கண்டு முதலிலிருந்து தான் மேற்கண்ட வீதாசாரங்கள் கொடுக்கப்படும்.

3. போரடிக்குப் பண்ணையாட்களுக்குத் தினசரி 1 மரக் கால்தான் கூலி கொடுக்கப்படும். அவர்கள் போரடியை முடித்து விட வேண்டும்.

4. மாமூல்படி பண்ணையாட்களுக்கு மானியம் (மனைக் கொல்லை) கொடுக்கப்படும்.

தஞ்சை சாகுபடிதார்-பண்ணையாள்

பாதுகாப்பு அவசரச் சட்ட விதிகள்

[10—9—1952 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் பாகம்-I விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.]

1952ஆம் வருடத்திய தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தின் 16ஆவது செக்ஷனில் கண்ட அதிகாரங்களை உபயோகித்து சென்னை கவர்னர் அவர்களால் கீழேகண்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

விதிகள்

விதி 1. இவ் விதிகளுக்கு தஞ்சை சாகுபடிதார்—பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்ட விதிகள் (1952) என்று பெயர்.

விதி 2. இவ் விதிகளில் :—

(i) 'அவசரச் சட்டம்' என்பது 1952ஆம் வருடத்திய தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்பு அவசரச் சட்டத்தைக் குறிக்கும்.

(ii) 'நமூனு' என்றால் இவ்விதிகளின் கடைசியில் கண்டிருக்கும் நமூனுக்கள்.

(iii) 'செக்ஷன்' என்றால் அவசரச் சட்டத்தின் செக்ஷனைக் குறிக்கும்.

விதி 3. செக்ஷன் 9ல் நிலத்தின் சொந்தக்காரரின் ஏஜண்டு என்று சொல்லப்பட்டிருப்பவர், நிலத்தின் சொந்தக்காரரால் எழுத்து மூலம் அதிகாரம் கொடுக்கப்பட்ட ஒரு நபராக இருக்க வேண்டும்.

விதி 4. ரிவென்யூ கோர்ட்டுக்கும் சமரச அதிகாரிக்கும் கீழே கண்ட அதிகாரங்கள் உண்டு. அவையாவன:—

(i) இந்த அவசரச் சட்டப்படி அவர்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செய்வதற்காக அவர்கள் எந்த நிலங்களுக்கும் போய் அவைகளைச் சோதனை செய்யலாம்; மேலும் அங்கே அவசியமாக செய்யப்பட வேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயப்படும் எக் காரியங்களையும் அவர்கள் செய்யலாம்.

(ii) மேலும் அவர்கள் சாட்சிகளைத் தம்முன் ஆஜராகும் படிக்கோ, தஸ்தவேஜுகளைத் தாகல் செய்யும்படிக்கோ சம்மன் செய்யலாம்.

விதி 5. ரிவென்யூ கோர்ட்டின் நடவடிக்கைகளையும் சமரச அதிகாரியின் நடவடிக்கைகளும் துரித முறையில் இருக்க வேண்டும்.

(a) சம்மன் தயார்செய்து அனுப்புவதிலும் (b) கட்சிக்காரர் களையும் சாட்சிகளையும் விசாரணை செய்வதிலும் (c) தஸ்தவேஜு களை தாகல் செய்யச் சொல்வதிலும் இவர்கள் கூடுமானவரை சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் கண்டிருக்கும் சூத்திரங்களைப் பின்பற்றவேண்டும்.

விதி 6. (a) தம்மைத் திரும்ப நிலத்தின் சாகுபடிதார ராக ஏற்றுக்கொண்டு நிலத்தைத் தம் வசம் கொடுக்கவேண்டு மென்று செக்ஷன் 6 (1) அல்லது 6 (2) ன்படி போடப்படும் ஒவ்வொரு மனுவும் நமூனு I ன்படி இருக்கவேண்டும். இம் மனுவை அதிகாரமுள்ள சமரச அதிகாரியிடம் மனுதாரே நேரி லும் தாகல் செய்யலாம்; அல்லது ஏஜண்டு மூலமும் தாகல் செய்யலாம்; அல்லது ரிஜிஸ்டர் தபால் மூலமும் அனுப்பலாம். சமரச அதிகாரி இல்லாத சமயங்களில் அவருடைய ஆபீசின் தலைமைக் குமாஸ்தா விடமும் கொடுக்கலாம். இவர்களிடம் மனுத் தாகல் செய்யப்பட்டதும் தாகல் செய்யப்பட்ட தேதியை அதில் அவர்கள் குறித்துக் கொள்ளவேண்டும்.

ஆனால், இவ்விதிகள் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதிக்கு (10-9-1952) முன்பு கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு இவ்விதி கிடையாது.

(b) சமரச அதிகாரி செக்ஷன் 6 (3) ன்படி மனுவின் பேரில் உத்தரவு செய்யும்போது அவர் தாம் அவ்விதம் உத்தரவு செய்வதற்கான காரணங்களைச் சுருக்கமாகத் தம் உத்தரவில் எழுத வேண்டும்.

(c) செக்ஷன் 6 (4) ன்படி ரிவன்யூ கோர்ட்டுக்குக் கொடுக்கப்படும் அப்பீல் அக்கோர்ட்டாரிடமோ, (அவர் இல்லாத சமயங்களில், அக்கோர்ட்டின் தலைமை குமாஸ்தாவிடமோ) மனுதார் நேரிலும் கொடுக்கலாம்; அல்லது ஏஜண்டு மூலமும் கொடுக்கலாம். அல்லது ரிஜிஸ்டர் தபால் மூலமும் அனுப்பலாம். அப்பீல் கிடைத்த தேதியை அவ்வதிகாரி அதில் குறித்துக்கொள்ள வேண்டும்.

விதி 7. அவசரச் சட்டத்தின் செக்ஷன் 8 (b)ல் குறிப்பிடப்பட்டிருக்கும் 'சாதாரண மொத்த மகசூல்' எவ்வளவு என்று நிர்ணயம் செய்வதில் ரிவன்யூ கோர்ட்டார் கீழ்கண்ட விஷயங்களை கவனிக்க வேண்டும். அதாவது, சம்பந்தப்பட்ட நிலங்களிலோ, அல்லது அதே வசதிகளையுடைய பக்க வட்டாரத்திலுள்ள நிலங்களிலோ பாசனத்திற்குச் சாதாரணமாய் தண்ணீர் 'சப்ளை' கிடைத்துவந்த வருடங்களில் என்ன மகசூல் கிடைத்தது—என்பதைக் காண்பிக்க சம்பந்தப்பட்ட நபர்களால் விசாரிக்கப்படும் சாட்சி வாக்கு மூலங்களையும் அவர்கள் தாகல் செய்யும் தஸ்தவேஜுகளில் கண்ட விஷயங்களையும் கவனித்து ரிவன்யூ கோர்ட்டால் 'சாதாரண மொத்த மகசூல்' என்ன என்பது நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

விதி 8. ரொக்கக் குத்தகை கொடுக்கப்பட வேண்டியிருந்தால், மொத்த மகசூலில் நிலத்தின் சொந்தக்காரருக்குக் கொடுக்கப்பட வேண்டிய பாகத்திற்கு பிரஸ்தாப ஐந்து வருட கெடுவுக்கு முன் உள்ள வருடத்தில் குத்தகை கொடுக்கப்பட வேண்டிய அதே மாதத்தில் ஜில்லா கெஜட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் விலைப்படி கணக்கு செய்து ரொக்கக் குத்தகை கொடுக்கப்பட வேண்டும். அவ்விதம் ஜில்லா கெஜட்டில் யாதொரு விலையும் குறிப்பிடப்படாமலிருந்தால் அம் மாதத்தில் உள்ளூரில் அமுலிலிருந்த கடை விலைப்படி கொடுக்கவேண்டும்.

விதி 9. நிலத்தின் சொந்தக்காரர்கள் இந்த அவசரச் சட்ட அமுலுக்குவந்த தேதியிலிருந்து, மூன்று மாதங்களுக்குள்

59399

செக்ஷன் 9ல் கண்ட ஷரத்துக்களை அனுசரித்து ஒவ்வொரு சாகுபடிதார் அல்லது குத்தகைதார் சம்பந்தமாயும் புதிதாக ஒரு குத்தகைப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

விதி 10. ஒவ்வொரு தாலூக்கா ஆபீசிலும், செக்ஷன் 9ல் கண்ட குத்தகைப் பத்திரங்களைப் பதிவு செய்துகொள்ளுவதற்காக, கிராம வாரியாக அட்டவணையுடன் ஒரு ரிஜிஸ்தர் வைத்துக் கொள்ளப்பட வேண்டும். அந்த ரிஜிஸ்தரான்து கீழே கண்ட விவரங்களைக் காண்பிக்கும்படி வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

அவையாவன :—

(i) தொடர்ந்த நம்பர்,

(ii) கிராமத்தின் பெயர்,

(iii) நிலத்தின் சொந்தக்காரரின் பெயரும் விலாசமும்.

(iv) சாகுபடிதார் அல்லது குத்தகைதாரின் பெயர்.

(v) நிலத்தின் சர்வே நம்பரும் விவரமும்.

(vi) குத்தகைப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட தேதி.

(vii) அதன் நகல் தாலூக்காவில் கிடைத்த தேதி.

(viii) அது கிடைத்த விபரம் அறிவிக்கப்பட்ட தேதி.

(ix) குறிப்புகள்—அனுப்பப்பட்ட நகல் கிடைத்ததாக அறிவிக்கும் உத்தியோகஸ்தரின் கையெழுத்து.

விதி 11. மேற்கண்டபடி குத்தகைப் பத்திரத்தின் நகல் தாலூக்கா ஆபீசுக்குக் கிடைத்தவுடன், அதை வரிசைக் கிரமமாய் ரிஜிஸ்தரில் பதிவு செய்துகொள்ள வேண்டும். மேலே 1 முதல் 8 ஐட்டங்களாகக் கண்டிருக்கும் விவரங்களைச் சுருக்கமாக அதில் கண்டு குத்தகைப் பத்திரம் தாலூக்கா ஆபீசுக்குக் கிடைத்த விஷயத்தையும் நிலத்தின் சொந்தக்காரருக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

விதி 12. செக்ஷன் 10(2)ன்படி சாகுபடிதார் அல்லது குத்தகைதாரை நிலத்தை விட்டு அகற்ற வேண்டுமென்று

போடப்படும் மனுக்கள் நமூனு IIன்படி இருக்கவேண்டும். மேலே விதி 6 (c)ல் கண்டபடி இம்மனுக்கள் தாகல் செய்யப்பட வேண்டும்.

விதி 13. (a) செக்ஷன் 10 (2) (c)-ல் கண்டபடி ஒரு சாகுபடிதார் அல்லது குத்தகைதார் கொடுக்கவேண்டிய பாக்கிகளைக் கொடுத்து விடும்படி ரிவன்யூ கோர்ட்டால் அவருக்கு அனுப்பப்படும் நோட்டீசுகள் நமூனு IIIன்படி இருக்கவேண்டும்.

(b) அவ்விதம் சாகுபடிதார் அல்லது குத்தகைதாருக்கு அனுப்பப்படும் நோடீசானது அவரிடமும் நேரிலேயும் கொடுக்கப்படலாம்; அவர் அகப்படாவிட்டால் அவர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வயது வந்த ஆண் நபரிடமும் கொடுக்கப்படலாம்; அதுவும் முடியாவிட்டால் அவர் கடைசியாக வசித்து வந்த இடத்தில் அந் நோட்டீசு ஒட்டப்படலாம்; அந்த இடமானது ரிவின்யூ கோர்ட்டின் அதிகார எல்லைக்கு வெளியே இருந்தால், அந்த விலாசத்திற்கு ரிஜிஸ்டர் தபால் மூலமும் அந் நோட்டீசு அனுப்பப்படலாம்.

விதி 14. ஒரு பண்ணையாள் நீக்கப்பட்ட விஷயத்தை செக்ஷன் 12ன்படி சமரச அதிகாரிக்குத் தெரிவிக்கும் ரிபோர்ட்டில் கீழே கண்ட விபரங்கள் இருக்கவேண்டும். அவையாவன:-

1. நிலத்தின் சொந்தக்காரரின் பெயரும் விலாசமும்.
2. பண்ணையாளின் பெயரும் விலாசமும்.
3. பண்ணையாளுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கூலி.
4. பண்ணையாள் வேலையிலிருந்த காலம்.
5. நீக்கப்பட்ட தேதி.
6. நீக்கப்பட்டதன் முழு காரணங்கள்.

விதி 15. ரிவின்யூ கோர்ட்டாலோ, சமரச அதிகாரியாலோ அவசரச் சட்டத்தின் கீழ் வேறு எந்த அதிகாரியாலோ செய்யப்படும் எவ்வித உத்தரவுகளும், தீர்மானங்களும், மத்தியஸ்த தீர்ப்புகளும், ரிவின்யூ டிபார்ட்மெண்டில் ரிவின்யூ இன்ஸ்பெக்டர் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு உத்தியோகஸ்தரால் நிறைவேற்றப்பட வேண்டும்.

அனுபந்தம்.

நமூனு I.

(விதி 6.)

செக்ஷன் 6 ன்படி சாகுபடி அல்லது குத்தகை பாத்தியத்தை திரும்ப அடைவதற்காக போடப்படும் மனு.

1. தாலூக்கா.
2. கிராமம்.
3. மனுதாரின் பெயரும் விலாசமும்.
4. நிலத்தின் சொந்தக்காரரின் பெயரும் விலாசமும்.
5. நிலங்களின் விபரம்.

சர்வே நெ.	ஸ்தலப் பெயர்.	நஞ்சை புஞ்சை அல்லது மானாவாரி, விபரம்.	மொத்த விஸ்தீர்ணம்.	பாத்தியம் கொண்டாடும் நிலங்களின் விஸ்தீர்ணம்.	சர்க்கார் தண்ணீர் பாசனமுடைய நிலமா அல்லவா.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)

மொத்தம்.

6. நிலங்களின் சுவாதீனத்தில் இருந்த போது மனுதார் என்ன ஏற்பாட்டின் பேரில் இருந்தார்.
7. மனுதார் நிலத்தின் சுவாதீனத்தை இழந்ததேதி.
8. 1951—52 விவசாய வருடத்தில் எந்த ஏற்பாட்டின் பேரில் நிலம் சாகுபடி செய்யப்பட்டது.
9. மனுத்தேதியில் ..லம் யாருடைய சுவாதீனத்தில் இருக்கிறது; எந்த ஏற்பாட்டின் பேரில் அவரால் நிலம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.
10. குறிப்புகள் (சுருக்கமாக மனுதார் செய்து கொள்ளும் புகார்.)

நமூனா II.

(விதி 12)

செக்ஷன் 10ன்படி ஒரு சாகுபடிதார் அல்லது குத்தகை தாரை நிலத்தை விட்டு நீக்குவதற்கான மனு.

1. தாலூக்கா.

2. கிராமம்.

3. நிலத்தின் சொந்தக்காரரின் (மனுதாரின்) பெயர்—முழு விலாசம்.

4. நீக்கப்பட வேண்டிய சாகுபடிதார் அல்லது குத்தகை தாருடைய பெயரும் முழு விலாசமும்,

5. நிலத்தின் சர்வே நம்பர், பெயர் விஸ்தீர்ணம்,

6. சாகுபடி அல்லது குத்தகை ஏற்பாட்டின் ஷரத்துக்கள்.

7. நீக்குவதற்கான காரணங்கள்.

